அம்புலிமாமா, பூந்தளிர், ராணிகாமிக்ஸ், இந்தியா ருடே துளிர், பாலமித்ரா, ராணி, கோகுலம் போன்ற
சஞ்சிகைகளை
சாவகச்சேரியில் பெறுவதற்கு
சோதி புத்தகசாலை
(மக்கள் கடைக்கு அருகில்)
கச்சாய் வீதி,
சாவகச்சேரி
(சி-6772)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சமூக அறிவியல் ஏடான
"நங்கூரம்"
சஞ்சிகையை சாவகச்சேரியில் பெற
சோதி புத்தகசாலை
(மக்கள் கடைக்கு அருகில்)
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(சி-6772)

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 09 சனிக்கிழமை (22 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 56

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக

சிங்கள இனவாத அமைப்பு ஒன்றை நிறுவ கொழும்பில் தீவிர முயற்சி

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக சிங்கள இனவாத அமைப்பு ஒன்றை நிறுவும் முயற்சிகள் கொழும்பில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனாவின் தலைமையில் இம்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களுக்கு மேலதிகமாக எந்த உரிமைகளும் வழங்கப்படக் கூடாது என்பதே இந்த அமைப்பு உருவாக்கப்படுவதன் முக்கிய நோக்கம் என இந்த அமைப்புக்கு தலைமை வகிக்கும் தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

இந்த அமைப்பில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

அத்துடன் சகல சிங்கள இனவாத அமைப்புகளும் இந்த அமைப்பில் சேர்க்கப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

காமினி கட்சி முழுமையாக ஐ. தே. கவுடன் இணையும்

பிரேமச்சந்திரா கூறுகிறார்

கொழும்பு, ஜன. 22

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் பணியாற்றுவது கடினமாகையினால் தமது முன்னணி ஐ. தே. கவுடன் இணையத் தீர்மானித்திருப்பதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிப் பொதுச் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா நேற்று பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு தெரிவித்தார்.

காமினி திஸநாயக்கா ஐ. தே கவுடன் சேர்ந்தாலும் தாம் சேரமாட்டேன் என்று கூறி வந்த பிரேமசந்திராதாமும் ஐ.தே கவுடன் இணையப் போவதாக தெரிவித்துள்ளார் என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது.

அதேவேளை — தமது முன்னணியின் கூட்டம் நீதிமன்ற தடை உத்தரவால் நடைபெற மாட்டாது என்றும் — அவர் தெரிவித்துள்ளார். (இ-3-6)

நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு முயற்சி

கொழும்பு, ஜன. 22

தற்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் உள்ள மேல்மாகாணசபை அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஐ.தே.க உறுப்பினர்கள் தயாராகிவருகின்றனர்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினராக சுசில் முனசிங்க மேற்கண்ட தகவலை பி.பி.சி. சிங்களச் சேவைக்குத் தெரிவித்தார். (இ-6)

ஈழ அகதிகளுக்கு ஆதரவான பேரணிக்கு தமிழகத்தில் பொலீஸார் அனுமதி மறுப்பு

முழுமையாகத் திருப்பி அனுப்புவது ஜெயலலிதா அரசின் நோக்கமாம்

சென்னை, ஜனவரி 22

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக — அதாவது அவர்களைப் பலவந்தமாக அனுப்பக் கூடாது— என்று அரசை வலியுறுத்தும் பேரணி ஒன்றை நடத்துவதற்கு இலங்கை - இந்திய நட்புறவுக் கூட்டமைப்பு திட்டமிட்டிருந்தது.

எனினும் தமிழகப் பொலீஸார் பேரணி நடத்துவதற்கு அனுமதி கொடுக்க மறுத்து விட்டனர்.

இதேவேளை —

ஈழத் தமிழ் அகதிகளை முழுமையாகத் திருப்பி அனுப்புவதே தங்களது குறிக்கோள் என்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

உத்தேச பேரணியை இம் மாதம் 30 ஆம் திகதி மதுரையில் இருந்து மண்டபம் வரை நடத்த இலங்கை - இந்திய நட்புறவுக் கூட்டமைப்பு திட்டமிட்டிருந்தது. அகதி முகாம்களில் நிலைமைகளை மோசமாக்கி அதன்மூலம் அகதிகளை தாய்நாடு திரும்பும் நிலைக்குத் தள்ளுவதை எடுத்துக் காட்டுவதும் இந்தப் பேரணியின் நோக்கமாக இருந்தது.

பேரணிக்குப் பொலீஸார் அனுமதி மறுப்பது அரசமைப்பில் வழங்கப் பட்டிருக்கும் நடமாட்டச் சுதந்திரத்தை மீறுவதாகும் என்று — உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசரும், இந்த கூட்டமைப்பின் காப்பாளருமான வி. ஆர். கிருஷ்ணஐயர் குறிப்பிட்டார்.

அகதிகளைப் பார்க்கும் அணுகுமுறையை அரசு மாற்

(4ஆம் பக்கம் பார்க்க)

கொலைப் பயமுறுத்தல் குறித்து நாடாளுமன்றில் அஷ்ரப்முறையீடு

கொழும்பு, ஜன. 22

கிழக்கு தேர்தலில் போட்டியிடுவதால், எனக்கும் மற்றும் எனது கட்சியினருக்கும் தொலைபேசி மூலம் கொலைப் பயமுறுத்தல் வருகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

விடுதலைப் புலிகளால் முன்னர் கொலைப் பயமுறுத்தல் வந்தது. இப்போது வேறுசில சக்திகளால் கொலைப் பயமுறுத்தல் வருகிறது.

இதுபற்றி உதவிப் பொலீஸ் மா அதிபரிடம் முறையிட்டுள்ளோம். எமக்கு பாதுகாப்பு தரவேண்டும் என்று அவர் கூறினார்.

உப - சபாநாயகர் காமினி பொன்சேகா பதில் அளிக்கையில் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்வதாகக் கூறினார்.

வறிய மாணவர்களுக்கான உணவு முத்திரைத் திட்டம்

யாழ். மாவட்டத்திலும் அமுலாகும்

யாழ்ப்பாணம், ஜன. 22

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, நிறுத்தப்பட்ட மதியஉணவு முத்திரைக்கு பதிலாக அரசு அறிமுகம் செய்துள்ள வறிய மாணவகளுக்கான மதிய உணவுமுத்திரைத் திட்டம் யாழ். மாவட்டத்திலும் அமுல் செய்யப்படவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இத்திட்டம் தொடர்பான விடயங்களை நேற்று கொழும்பில் இருந்து அனுப்பிவைத்துள்ளார் என மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா இலகநாயகம் போல் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கு இந்திய ராணுவம் தமிழருக்கு எதிரான துரோகம்

கருணாநிதி மீது வை. கோ. குற்றச்சாட்டு

சென்னை, ஜன. 22

இலங்கைக்கு இந்திய இராணுவம் அனுப்பப்பட்டது தொடர்பாக கலைஞர் கருணாநிதி இரு வேறு விதமான கருத்துக்களைத் தெரிவித்தார்.

அதன் மூலம் [illegible] கருணாநிதி [illegible] கருணாநிதி [illegible] கலைஞர் சட்டசபையில் ஒருவிதமாகவும் பேசியதைச் சுட்டிக் காட்டியே கோபாலசாமி, கலைஞர் கருணாநிதியைச் சாடியுள்ளார்.

அவர் ஒரு முதல்தர சந்தர்ப்பவாதி என்றும் கண்டித்தார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜெயின் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த பிரமாணத்திற்கு கருணாநிதி சமர்ப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

பெரிய கல்லாறு பகுதியில் விசேட அதிரடிப்படைமுகாம்

மட்டக்களப்பு, பெரிய கல்லாறு பகுதியில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினர் புதிய முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

மட்டக்களப்பு - கல்முனை வீதியிலேயே இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை முன்விட்டு புதிய முகாம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்தது.

இம் முகாம் அமைக்கப்பட்ட பின்னர் அவ் வீதி வழியால் செல்லும் வாகனங்களை படையினர் கடும் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இதனால் மக்கள் போக்குவரத்து செய்வதில் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதனிடையே — ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும். விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் விசேட அதிரடிப் படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

செஞ்சிலுவைச் சங்க ஆசியப் பிராந்திய அதிகாரி வருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 22

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் ஆசிய விவகாரங்களுக்கு பொறுப்பான அதிகாரியான திரு. பிலிப் கொண்டசா அடுத்த வார ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

ஜெனிவா அலுவலகத்தில் பணிபுரியும் இவர் நாளை கொழும்பு வந்து சேருவார்.

கொழும்பிலும், பலாலியிலும் பாதுகாப்பு உயர் அதிகாரிகளுடன் இவர் பேச்சுக்கள் நடத்திய பின்னர் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடனும், வைத்திய, அரச அதிகாரிகளுடனும் பேச்சுக்கள் நடத்துவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரி பாதுகாப்பு வலயம் மீது படையினர் மேற்கொள்ளும் ஷெல் தாக்குதல்கள் —

பருத்தித்துறைக்கு வரும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிப்பது ஆகியவை தொடர்பாகவும் இவர் பேச்சுக்கள் நடத்துவார். (இ-3)

ஸ்ரீலங்காப்படையினர் சுட்டு 4 இந்திய மீனவர்கள் காயம்

இந்தியா கடும் ஆட்சேபம்

கடந்த திங்கட்கிழமையும் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இந்திய மீனவர்கள் இலக்காகினர்.

இது குறித்து கொழும்பில் உள்ள தனது தூதரகம் ஊடாக இந்திய அரசு இலங்கை அரசுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

இலங்கைக் கடற்படையினரின் இத்தாக்குதலில் 4 இந்திய மீனவர்கள் காயமடைந்தனர்; 3 பேரைக் காணவில்லை.

காயமடைந்தவர்கள் இந்தியாவுக்குத் திரும்புவதற்காக கொழும்பில் தங்கியுள்ளனர்.

இலங்கை கடற்படையினரின் இத்தாக்குதல் எதிர்பாராத ஒன்று என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-எ-3)

ஆங்கில ஆசிரியர் பதவி வெற்றிடங்கள்

விண்ணப்ப முடிவு பெப்ரவரி 14

யாழ்ப்பாணம், ஜன. 22

புதிதாக ஆங்கில ஆசிரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கல்வி அமைச்சிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 14-02-94 ஆகும்.

கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபர் நேற்று யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இதுபற்றி தெரிவித்துள்ளார். (இ-162)

றம்பாவ குண்டு வெடிப்பு: கொலைப்படையினருக்கு ரூ. 1லட்சம் நஷ்டஈடு

றம்பாவ குண்டு வெடிப்பில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒருலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட உள்ளது.

இறுதிக் கிரியைகளை அரச செலவில் நடத்தவும் மேலதிக செலவுகளுக்கு 2 ஆயிரம் ரூபா வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் அங்கவீனமுற்றவர்களுக்கும், படுகாயமுற்றவர்களுக்கும் வைத்திய அறிக்கைகளுக்கமைய நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது. (இ-6-9)

9 பொலீஸார் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜன. 22

அநுராதபுரம் பஸ் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலீஸார் ஒன்பது பொலீஸ் கான்ஸ்டபிள்களை வேலையில் இருந்து இடைநிறுத்தியுள்ளனர் என கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

குறித்த பஸ் வண்டியை மதவாச்சிக்கும், அரச மரச் சந்திக்கும் இடையில் சோதனையிடத் தவறியமைக்காகவே இவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், இது தொடர்பாக 16 பொலீஸார் மீது ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக மதவாச்சி பிரதேச பொலீஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-3-9)

4 ஆண்டுகள் சேவை செய்த பயிலுநர் ஆசிரியரை நிரந்தரமாக்க முடிவு

கொழும்பு, ஜன. 22

நான்கு ஆண்டுகள் பூர்த்தி செய்த பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கல்வி, கலாசார அமைச்சர் லொக்கு பண்டார மேற்கண்ட தகவலை நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

மாத்தளை மாவட்ட எம். பி. நந்தமித்திரா ஏக்நாயக்கா எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்கள் தற்சமயம் சேவையில் உள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார். (இ-3-6)

ஐ.நா. தூதரக அதிகாரியும் வருகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 22

அகதிகளுக்கான ஐ.நா தூதரக அதிகாரி திரு பீற்றர் நிக்லஸ் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

வடபகுதியில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் சேவையை தொடர்வது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் அவர் பேச விருக்கிறார்.

கடந்த புதன்கிழமை இவர் யாழ்ப்பாணம் வர ஏற்பாடுகள் செய்தார் என்பதும் — காகசேசன் துறைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் கப்பல் வசதியில்லாதால் அவர் தமது பயணத்தை பின் போட்டதும் — தெரிந்தவையே. (இ-3)

முச்சந்தி முரளி

காமினி கட்சியின் சுயரூபம் இப்பதான் வெளிப்படுகிறது பாருங்கோ.....!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஹொண்டா MB-5 தமிழ் பதிவுச் சான்றிதழுடன் விற்பனைக்குண்டு. கலைவாணி வீடியோ, நெல்லியடி. (29007)

நிலத்திற்கு விரிக்கும் சிவப்பு நிற காப்பெற் 12 அடி நீளம், 6 அடி அகலம். இரண்டு மருண் கலர் காப்பெற்ஸ் வட்டமானவை, சிங் வாஷிங் பேஸின் - ஸ்ரீல் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நாதன், 16/3, விதானையார் வீதி, சுன்டிக்குளி, யாழ்ப்பாணம். (29022)

அடைவைக்கக்கூடிய நல்ல இன கோழிமுட்டைகள், பண்டம் கோழிமுட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (29016)

5 வயது அல்சேஷன் ஆண் நாய், 1 வயது பொமனேரியன் பெண் நாய். நல்ல பழக்கமுடையவை. வான் கோழிச் சேவல்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சாயி மெடிக்கல்ஸ், திருநெல்வேலி. (29019)

கடைக்குரிய நல்ல நிலையில் உள்ள இரும்பு சுருக்குக் கேற்றுகள் விற்பனைக்குண்டு. அம்பிகா, பிப்பிலிச்சந்தி, மாவிப்பாய் பார் அருகாமை. (29045)

கோழிக்குஞ்சு விற்பனை

கைலன் (Hy-Line) பிறவுன் + வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. கோழிக் குஞ்சுகள் ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். மொத்தமாக எடுப்பவர்களுக்கு விலை ரூபா 50/- மட்டுமே. 'மல்லிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29040)

காணி விற்பனைக்கு

இராஜவீதி, ஞானபாஸ்கர வீதி ஆகியன சந்திக்கும் இடத்தில் நான்கு பரப்பு காணி விற்பனைக்குண்டு. வீடு, கடை கட்டுவதற்கு உகந்தது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: து சுந்தரலிங்கம், இராஜவீதி, திருநெல்வேலி. (29042)

மணமகன் தேவை

இந்து மதம், பூரட்டாதி நட்சத்திரம் செவ்வாய்க்குற்றமற்ற, படித்த 24வயதுடைய பெண்ணுக்கு மணமகன் தேவை தொடர்பு: G V Kanesalinkam C/o Paramanatha, Uyarappulam, Anaikoddai. (28977)

முகங்களுக்கு

உங்கள் வீட்டுத்தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் காள்னவு செய்கின்றோம். Taste Line Industries (Pvt) Ltd 14 Scenier Lane, Jaffna. 28797.

தவறிவிட்டது

18-01-94 செவ்வாய் இரவு பூநகரியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் போது கிளாலியில் முக்கிய ஆவணங்கள் பொருள்கள் அடங்கிய பொதி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். ம. தேவதாஸ், அருள்நாயகி புத்தகசாலை, பஸ் நிலையம், கொடிகாமம். (29038)

நிறைவு நாள் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன. 22 தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியில் நடத்திப் பட்டு வந்த யுவதிகளுக்கான பயிற்சி நெறியின் நிறைவு நாள் கண்காட்சி இன்றும் நாளையும் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

மனையியல் தையல் மற்றும் கேக் ஐஸிங், கைப்பணி சம்பந்தமான பொருள்கள் கண்காட்சியில் இடம்பெற வுள்ளன. (இ-5)

கண்காட்சி

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஆதரவுடன்

முடமாவடி

ஞானவைரவர் சனசமூக நிலையத்தினரால் யுவதிகளுக்கு நடத்தப்பட்ட தையல், ஜிங், கைப்பணி பூவேலை பயிற்சி கண்காட்சி

இடம்: செங்குந்தா இந்துக்கல்லூரி மண்டபம்

காலம்: 1994-01-22, 23ஆம் திகதிகளில்

பிரதம விருந்தினர்: திருமதி ந. சிவசிதம்பரம் (நல்லூர் பிரதேச செயலாளர்)

(29032)

CHUNDIKULI GIRL'S COLLEGE
Vocational Training Institute

ANNUAL EXHIBITION AND SALE

Date: January 26th, 27th & 28th
Time: 9 a.m. to 5 p.m.

Exhibits:-
1. HANDICRAFTS
2. NEEDLE WORK
3. FLOWER MAKING
   (a) Stockinet Flowers & Arrangements
   (b) Wilton Flower Icing & Arrangements
4. WILTON CAKE MAKING
   (a) Birthday Cakes
   (b) Wedding Structures

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

பாட நெறிகள்

ஆரம்பம்: **02 - 02 - 1994**

சட்டெழுத்து சுருக்கெழுத்து ஆங்கிலம் (London Pitsman) 6 மாதகாலப் பயிற்சி

சுருக்கெழுத்து சுருக்கெழுத்து தமிழ் Spoken English – [illegible]

மற்றும் பயிற்சி [illegible]

1 கேக் ஐசிங்
2 சமையற் கலை
3 மனையியற் கலை
4 பூவேலை (Stockinet)
5 சமையலங்காரம்
6 கைப்பணிகள்

— அதிபர்.

[சி-7105]

வைத்தியர் தேவை

யாழ். நகரின் மத்தியில் இயங்க இருக்கும் வைத்திய கிளினிக்கை நிலையத்திற்கு (Clinic) குழந்தை வைத்தியத்தில் அனுபவம் மிக்க வைத்தியர் (M.B.B.S.) முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ கடமையாற்ற தேவை. ஒய்வுபெற்றோர், இடம் பெயர்ந்தோர் விரும்பத்தக்கது. 31 - 01 - 1994க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 595
C/o உதயன், யாழ்ப்பாணம்.

(சி/7107)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்: 01 — 08 — 1916
ஆண்டவன் அடியில்: 23 — 12 — 1993

சபாபதிப்பிள்ளை இராசையா

(ஒய்வுபெற்ற கூட்டுறவு நிலை முகாமையாளர், அரியாலை)

பண்போடும், பாசத்தோடும் எம்மை வளர்த்து ஆளாக்கி விட்ட எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கிற்கு எங்கள் கண்ணீர் அஞ்சலி. அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் மறைவின்போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றி அறிவித்தலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று 22 - 01 - 1994 இல் நடைபெறும் மதிய போசனத்தில் பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

கொங்கமை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (29024)

31ஆம் நாள் கண்ணீரஞ்சலி

22 — 01 — 1994



அமரர் சின்னத்துரை சதானந்தன்

(இளைப்பாறிய தபாலதிபர், மேற்பார்வை அதிகாரி)

அன்னை மடியில்: 01 — 12 — 1927
இறைவன் அடியில்: 24 — 12 — 1993

எம் உயிரே எங்கள் பப்பா!
பப்பா, பப்பா என்று பாசமுடன் அழைத்தோமே.
ஆலமரமாய் எம் அனைவர்க்கும் நிழல் தந்தீர்,
அழியா நினைவலைகள் ஆட்டிப் படைக்கிறதே
மறக்க முடியவில்லை மாறாது உம் நினைவு
நெஞ்சம் எல்லாம் நெருப்பாக
நினைவெல்லாம் உமக்காக
வெப்பத்தால் வெதும்புகிறோம்
வேதனையால் துடிக்கின்றோம்
கனவிலும் நனவிலும் காணும் இடமெங்கும்
கண்ணிலும் கருத்திலும் நிறைந்திருக்கும் –
எங்கள் பப்பா

இன்னும் சில காலம் வாழ்ந்திருக்க வொட்டாது காலவன் கண்பட்டு கடுகியாய் சென்ற தென்ன அம்பாள் திருவடியில் ஆனந்தமாய் அமர்ந்திருக்க அகிலும் பகலும் ஆண்டவனை வேண்டுகிறோம்.

துன்பத்தில் துவளும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

திருமதி சரஸ்வதி சதானந்தன்,
[illegible]
35, விவேகானந்தர் வீதி,
[illegible]

[29009]

குருநகர் வர்த்தகர் சங்கம்

வருடாந்த

பொதுக்கூட்ட அழைப்பு

காலம்: 23 - 01 - 94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி

இடம்: காரியாலய பணிமனை

நடப்பு வருட புதிய நிர்வாக சபை இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட இருப்பதால் அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் இக் கூட்டத்திற்கு வருகை தருமாறு வேண்டுகிறோம்.

மி. யேசுதாசன் — தலைவர்.
க. கி. கிருஷ்ணன் — செயலாளர்.
(சி-7115)

கண்ணீர் அஞ்சலி

திரு. ச. சொக்கலிங்கம்

எமது கல்லூரி தமிழ் ஆசிரியை
திருமதி பத்மாவதி இரத்தினவேல் அவர்களின்

தந்தையார் திரு. ச. சொக்கலிங்கம் அவர்கள் சிவபதம் அடைந்ததையொட்டி எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை ஆக்குகிறோம்.

13D கலைப்பிரிவு மாணவர்கள்,
யா/கனகரெத்தினம் ம. ம. வி.
(29037)

ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 08 — 05 — 1924
மறைவு: 22 — 01 — 1989

பேராசிரியர் கலாநிதி

அமரர் சு. வித்தியானந்தன்

(யாழ்ப்பாணம்- தெல்லிப்பளை- வீமன்காமம்)

பல்கலை வேந்தர் மக்கட்
பண்புடை வேந்தர் தூய
நல்கலை வேந்தர் பேச
நயமுடை வேந்தர் ஈழச்
சொல்கலை வேந்தர் அன்பர்
தொழுதிடும் வேந்தர் யாவும்
வெல்கலை வேந்தர்; வாழும்
வித்தியானந்த வேந்தர்.

- காரை -

என்றும் நீங்கா நினைவுடன்
-குடும்பத்தினர்.
(சி-7104)

ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி சுப்பிரமணியம் சின்னம்மா

அன்னையின்மடியில்: 06 — 02 — 1912
அரனார் திருவடியில்: 01 — 02 — 1993

திதி: 22-01-1994

ஆண்டு ஒன்று ஓடி மறையுது ஆச்சி! உம் அன்பு மீண்டும் மீண்டும் நெஞ்சில் நிறையுது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

6, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
சரவணை இழக்கு, பள்ளம்புலம்,
வேலணை. (28998)

திருமண அழைப்பு

அன்புடையீர்!

சனிக்கிழமை தைத்திங்கள் 9ஆம் நாள் இன்று (ஜனவரி 22 - 01 - 1994) மாலை 6-00 மணி முதல் 8-00 மணி வரையுமுள்ள ★ சுபமுகூர்த்த வேளையில் ★

எமது புதல்வன்
பாலகுமார்
அவர்களுக்கும்

எமது புதல்வி
நீதிமதி
அவர்களுக்கும்

புதிய கதிரேசன் மண்டபம், கொழும்பு - 4இல் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு வருகைதந்து மணமக்களை வாழ்த்துமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

★ இவ்வண்ணம் தங்கள் நல்வரவை எதிர்நோக்கும் ★

அ. இரத்தினசிங்கம்-
பேரின்பம் இரத்தினசிங்கம்,
35, Lenton Crescent,
Oakhurst,
N. S. W. 2770, Australia.

இ. சிறீநிவாசன்,
சாந்தி சிறீநிவாசன்,
52, விவேகானந்தர் வீதி,
கொழும்பு - 6.

(29044)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

தேர்தலை ரத்துச் செய்க

கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல் நடத்துவது குறித்து எதிர்க்கட்சிகள் பல எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. நாடாளுமன்றத்தில் அவற்றின் ஆட்சேபக் குரல்கள் பலமாக, பலமாக ஒலித்துள்ளன.

ஐக்கிய சோசலிச முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) ஆகிய சிறிய கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்களே கிழக்கில் தேர்தலை நடத்தக் கூடாது என்று வற்புறுத்தி உள்ளார்கள்.

கிழக்கின் உள்ளூராட்சித் தேர்தல்கள் அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புக்கு இடம் கொடுக்கும் விதத்தில் ஒரு பக்கச் சார்பாக சர்வாதிகார முறையிலேயே நடக்கும் என்பதில் எவரும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

அதனை முன்னேற்பாடாகவே ஊர்ஜிதம் செய்யும் வகையில் வேட்பாளர்களிலேயே அராஜகம் திணிக்கப்பட்டிருக்கிறது.

தடுப்புக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டு, பொலீஸ் நிலையத்தில் அல்லது இராணுவ முகாமில் ஒப்பமிடச் சென்றவர்கள் கூட பலாத்காரமாக வேட்பாளர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்றால் —

வாக்காளர் மீது பலாத்காரம், அராஜகம் எந்தளவுக்குத் திணிக்கப்படும் என்பதனை இப்போதே மதிப்பிட்டு விடலாம்.

அரசும், அங்கு சிவில் நிர்வாகம் நடத்தும் படையினரும் தமது விருப்பத்தையும் ஆசையையும் பூர்த்தி செய்யும் விதத்தில் தேர்தல் முடிவுகளை உருவாக்குவார்கள் என்பதையும் உறுதிபடச் சொல்ல முடியும்!

ஐக்கிய தேசியக் கட்சிசார்பில் போட்டியிடுவதற்கு பல இடங்களில் எவரும் முன்வரவில்லை. அந்தளவுக்கு கிழக்கில் அதற்கு ஆதரவு மிக மந்தமாக உள்ளது. அதனால் படையினரே ஆட்களை "கண்டுபிடித்து" ஆயுத முனையில் பலவந்தப்படுத்தி, அவர்களை வேட்பாளர்களாக்கி உள்ளனர். ஆனால் அந்த அரசியல் விரும்பாத வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றி அடையும் விதத்திலேயே வாக்களிப்பு நடைபெறும் என்பது நிச்சயம். இது தெரியாமல் ஸ்ரீ ல.சு.கட்சி போன்ற எதிர்க்கட்சிகளும் தேர்தலில் குதித்துள்ளன! பாவங்கள் அனுதாபத்துக்குரியன!

கிழக்கில் பகலில் படையினரும், இரவில் விடுதலைப் புலிகளும் நிர்வாகம் செய்கின்றனர் என்றே அங்கு சொல்லும் எந்த வெளிநாட்டு அவதானியும் கூறுகின்றனர். இதனைத் "திவயின" போன்ற சிங்களப் பத்திரிகைகளும் சில சந்தர்ப்பங்களில் துணிச்சலுடன் தெரிவித்திருக்கின்றன.

நிலைமை அதுவல்ல. கிழக்கு முழுவதும் வவுனியா நகரசபைப் பகுதியும் படையினர் வசமே உள்ளன. அங்கு "தேர்தல் ஒன்றை நடத்திக் காட்டுகிறோம். பாருங்கள்!" என்று தெற்கின் ஏனைய பகுதிச் சிங்களவர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் காட்டுவதற்காகவே இந்தத் தேர்தல்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல், யுத்தத்தை நிறுத்தாமல் கிழக்கில் பலாத்காரத் தேர்தலை நடத்தும் ஜனநாயகத்தை கேலிக் கூத்தாக்குவது மட்டுமல்ல, அதனைக் கீழ்த்தரமாக்குவதாகவும் முடியும்.

எனவே எதிரணியில் செல்வாக்கில்லாதவர்களே நாடாளுமன்றத்தில் தேர்தலுக்கு எதிராகக் குரல் எழுப்பினார்கள் என்று கருதித் தான்தோன்றித் தனமாக நடக்காமல் —

அரசாங்கம் கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலை ரத்துச் செய்ய வேண்டும். விருதுக்கு வேட்டையாடி பெயரளவில் உள்ள ஜனநாயகத்தையாவது சாகடிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம். கிழக்கில் தேர்தல் என்று கூறித் தமிழர்களை மேலும் அடக்கு முறைக்கு ஆளாக்கினால் அதன் விளைவு பாரதூரமாக மாறும்.

எம்.எல்.ரி பரீட்சை இன்று

யாழ்ப்பாணம், ஜன. 22

ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர் பயிலுனர் பதவிகளுக்கு (எம்.எல்.ரி) ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்தாரர்கள் மற்றும் அனுமதி அட்டைகள் யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. கல்வி அலுவலக அதிகாரி ஒருவர் விமான மூலம் அவற்றை இங்கு எடுத்து வந்தார்.

யாழ். நகரில் எட்டுப் பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள மேற்படி பரீட்சையில் கலந்து ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் 60 பேரின் விண்ணப்பங்கள் — அவற்றுடன் பணம் செலுத்தியதற்கான தபால் கட்டை இணைக்கப்படாததால் பரீட்சைத் திணைக்களத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன என்றும்—

எனினும் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் யாழ் கல்வி அலுவலகத்திற்குச் சமுகமளித்து பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான தபால் நிலைய சீட்டையை காண்பித்து தங்கள் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலக திருத்த வேலைக்கு கட்டடப்பொருள்

நவாலி, ஜன. 22

யாழ் செயலக திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு நுணாவிலிலுள்ள கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட கட்டடப் பொருள்கள் யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

சுப்பசொளிக் குண்டு வீச்சினால் யாழ். செயலகம் சேதம் அடைந்தது தெரிந்ததே.

[இ-100]

நகைகளை மார்ச் 31க்கு முன் மீளப்பெற பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் பிரதேசத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்களது நகைகள் கொழும்பில் உள்ள அடகு நகை மீட்புப் பிரிவில் வைத்து வழங்கப்பட்டு வருவதாகவும்-

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சம்பந்தப்பட்டவர்கள் தமது நகைகளை அக்கு மீளப் பெற்றுக் கொள்ளுமாறும் மக்கள் வங்கியின் யாழ். பிரதேச உதவி பிராந்திய முகாமையாளர் கேட்டுள்ளார்.

இலக்கம் 220. டீன்ஸ் ரோட், மருதானையில் அமைந்துள்ள மக்கள் வங்கி நகை மீட்புப் பிரிவில் நேரில் சென்று தங்கள் நகைகளை மீளப் பெற முடியாத நிலையில் உள்ளோர் தங்கள் சார்பில் தமது பிரதிநிதி ஒருவரை அனுப்பி நகைகளை மீளப்பெற ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும்—

இது தொடர்பான மேலதிக விவரங்களை அண்மையில் உள்ள மக்கள் வங்கி கிளை முகாமையாளர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

பெப்ரவரி நடுப் பகுதியில் உருளைகிழங்கு அறுவடை

யாழ்ப்பாணம், ஜன. 22

அண்மையில் பயிரிடப்பட்டுள்ள 40 நாட்கள் பயிராக வளர்ந்துள்ள விதை உருளைக்கிழங்கு வரும் பெப்ரவரி நடுப்பகுதியில் அறுவடைக்கு தயாராகி விடும் என்று யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

பத்தூர், உரும்பராய் மற்றும் உடுவில் விவசாய போதனாசிரியர் பகுதிகளிலேயே இம்முறை விதை உருளைக்கிழங்கு கூடுதலாக பயிரிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட இடங்களையும் சேர்த்து 3 ஆயிரத்து 300 அங்கு விதை உருளைக்கிழங்கு 2ஆயிரம் ஏக்கர்களில் பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-162-17)

2 கோணங்களை கொண்ட இராணுவ அணுகுமுறை!

ஜெரி டி சில்வா சொல்கிறார்

கொழும்பு, ஜன. 22

எமது அணுகுமுறை உத்தி இரு கோணங்களை உள்ளடக்கியதாகும். ஒன்று குறுகிய கால அடிப்படையிலானது. மற்றது நீண்ட கால உபாயத்தைக் கொண்டது ஒன்றுடன் ஒன்று தொடர்பானதாக இரண்டும் அமைகின்றன.

இவ்வாறு இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா சண்டே ரைம்ஸுக்கு அளித்த பிரத்தியேக பேட்டியில் தெரிவித்தார்.

குறுகிய கால உபாயம், உடனடித் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுவது நீண்ட கால உபாயம் அரசியல் அதிகாரத்தவருடன் ஆலோசனை நடத்தி மேற்கொள்வது. சில உபாயங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு ஏராளமான போர்த்தள பாடங்கள், ஆயுதங்கள், வெடிமருந்துகள், வாகனங்கள் தேவைப்படுகின்றன

எமது திட்டங்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் ஆராயப்பட்டன. அதன் விவரங்களை கூற நான் விரும்பவில்லை. அப்படிச் செய்வது எதிர்பாராத விளைவைக் கொடுக்கும் என்று புதிய தளபதி கூறினார்.

தற்சார்பு பொருளாதாரத்தை வளர்க்க ஒன்று சேருவோம்

த.பொ.மே.நி. பணிப்பாளர் அறை கூவல்

யாழ்ப்பாணம், ஜன. 22

1990இல் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட போது அரசினால் அமுல்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடை மக்களைப் பீதியடைய வைத்தது. இராணுவ அழுத்தங்கள் காரணமாக பலர் இங்கிருந்து வெளியேறத் தொடங்கினார்கள். மேலும் பலர் வேலை வாய்ப்பிற்காக ஏங்கித் தவித்தார்கள். அன்று இந்த நிலைமையில் எம்மால் முடுக்கி விடப்பட்ட தற்சார்பு பொருளாதாரம் தற்போது வளர்ந்து வருகிறது. ஒவ்வொரு துறைசார்ந்தவர்களும் எம்மோடு ஒன்று சேர்ந்து உழைத்தால் எமது தற்சார்பு பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பணிப்பாளர் திரு. வி. செம்பியன்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற "எமது போராட்டமும் தற்சார்புப் பொருண்மியமும்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. வே. இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. செம்பியன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

தமிழீழம் மீன்வளத்திலும் நெல்லிலும் தன்னிறைவு கண்டது! ஏற்றுமதியும் செய்தது. உப்பு, தும்பு போன்ற நம்மிக்க தருகின்ற பொருளாதார வளம் நிறைய இங்கு உண்டு. இதற்கு முலதனம் தொழில் நுட்பம் என்பன தேவையாக உள்ளன. தொழில் நுட்பத்தில் நாம் பின்தங்கி இருப்போமானால் உலகம் எங்களை மிதித்துச் செல்லும்.

எமது உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பைப் பெற எமது [illegible] உற்பத்திகளுக்கே முன்னுரிமை கொடுக்க [illegible] வேண்டும். இதை ஒரு தேசப் பற்றுடன் கூடிய விடயமாகக் கருதி நாம் செயற்பட வேண்டும் என்றார்.

இந்நூலின் மதிப்பீட்டு உரைகளை யாழ். பல்கலைக் கழக பொருளியல்துறை விரிவுரையாளர் திரு. வி. வி. சிவநாதன், பொருளியல் பீடத் தலைவர் பேராசிரியர் திரு எஸ். பாலகிருஷ்ணன், தமிழீழ கல்விக்கழக துணைப் பொறுப்பாளர் திரு. பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் நூலினை வெளியீட்டு வைக்க நூலின் முதற் பிரதியை யாழ். புறோமோட் டர்ஸ் உரிமையாளர் திரு. க. பூரணச்சந்திரன் பெற்றுக் கொண்டார். முன்னதாக வரவேற்புரையை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த திரு. செல்வேரும், இறுதியாக நன்றியுரையை இணுவையூர் திரு. [illegible] நிகழ்த்தினார்கள்.

(த-162)

ஜனசக்தி உதவி பெற்றோரின் வங்கி கணக்குகள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் ஜனசக்தி உதவி பெற்றவர்களின் வங்கிக் கணக்குகள் கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச செயலாளர் பிரிவின் திட்டமிடல் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை—

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 28 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஜனசக்தி கருத்திட்டத்தின் கீழ் சுயதொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு ஜனசக்தி பெற்ற வறிய குடும்பங்களுக்கு கூட்டுறவு அடிப்படையில் 60ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடு, மாடு, கோழிகள் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

முதற்கட்டமான யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் ஜனசக்தி உதவி பெற்ற 28 குடும்பங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு இவை வழங்கப்பட்டுள்ளன.

(த-17)

மோதிரம் யாருடையது?

யாழ்ப்பாணம், ஜன. 22

கோண்டாவில் பகுதியில் தாம் கண்டெடுத்த மோதிரம் ஒன்றை கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலய மாணவர்களான ஆ. நிகன் [ஆண்டு 4], பூ. கிருஸ்ணபாலன் [ஆண்டு 6 ஆகியோர் பாடசாலை அதிபர் ஊடாக கோண்டாவிலில் உள்ள அரசியல் துறை யாழ். மாவட்டச் செயலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

மோதிரத்தை தவறவிட்டவர்கள் உரிய சான்றுகளைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

[இ-5]

தலைவர் பிரபாவை ஒப்படைக்கக் கோரிக்கையாம்

கொழும்பு, ஜன. 22

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனையும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானையும் இந்தியப் பொலீஸாரிடம் ஒப்படைக்குமாறு இலங்கையிடம் இந்தியா கோரியுள்ளது.

முதன்முறையாக இந்தியா அரச மட்டத்தில் இக்கோரிக்கையை விடுத்திருப்பதாக 'இன்ரபொல்' அமைப்பின் இலங்கைக் கிளையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்பில் சிங்கள நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-எ-6)

ஷெல் வீச்சில் காயமடைந்த பெண் மரணம்

பலாலி முகாமில் இருந்து கடந்த புதனன்று சுன்னாகம் மயிலணிப் பகுதியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் காயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் பெண் நேற்று முன்தினம் மரணமானார்.

இளையகுட்டி ஞானசுதேவி [வயது 30] என்பவரே மரணமடைந்தவராவார்.

இவருடன் காயமடைந்தவர்களில் மேலும் நால்வர் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

[இ-5-15-17]

கம்பன் விழாவின் இன்றைய நிகழ்வுகள்

காரைநகர் கம்பன் கழகம் நடத்தும் கம்பன் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் இன்று காலை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் 9 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். கம்பன் இசை அமுது, கலைதெரி அரங்கம் ஆகியவை சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறும்.

மாலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 4 மணிக்கு கலாநிதி பரராசசிங்கம் தலைமையில் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து திரு. இராம. சண்முகதாஸ் குழுவினரின் மங்கள இசை இடம் பெறும்.

மாலை நிகழ்ச்சியில் சிறப்பு நிகழ்ச்சிகளாக "இலக்கியச் சோலை" "படைத்தவனை சந்திக்கும் பாத்திரங்கள்' ஆகியவை இடம்பெறும்.

இலக்கியச் சோலையில் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை, கவிஞர் மன்னன் கந்தப்பு, திருவாளர்கள் த. நாகேஸ்வரன், சி சண்முகதாஸ், ச. மணிமாறன் இ. சிறீதரன், ஸ்ரீ பிரசாந்தன் க. ஜெயநிதி, செல்விகள் ப நாமகள் ச. சாந்தினி ஆகியோரும்—

படைத்தவனை சந்திக்கும் பாத்திரங்களாக திருவாளர்கள் இ. ஜெயராஜ், எம். எஸ். ஸ்ரீதயாளன் பி ஏ. கே. இராஜரத்தினம், த. கலாமணி எம். ஏ., பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை, பொன். கணேசமூர்த்தி, திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ. ஆகியோரும் கலந்து கொள்வர்.

(த)

விழிப்படல நோய் சிகிச்சைக்கு நவீன இயந்திரங்கள் அன்பளிப்பு

லயன்ஸ் கழகம் நாளை வழங்குகிறது

யாழ்ப்பாணம், ஜன. 22

விழிப்படல நோயாளருக்குரிய (Cataract) சத்திர சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் நவீன "கிரயோ" (Cryo) இயந்திரங்களில் மூன்று யாழ்ப்பாண மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்குக் கிடைக்கவுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி ஆஸ்பத்திரி, பருத்தித்துறை ஆஸ்பத்திரி ஆகிய மூன்று ஆஸ்பத்திரிகளுக்குமென இந்த மூன்று நவீன இயந்திரங்களையும் —

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 பி மாவட்டத்தின் பிராந்தியத் தலைவர் திரு. எஸ். இராமகிருஷ்ணன் நாளை, உரிய அதிகாரிகளிடம் கையளிக்க உள்ளார்.

நாளை பிற்பகல் 4 மணிக்கு, சுண்டிக்குளி, கோவில் வீதி, 343 இலக்க இல்லத்தில் நடைபெறும் அன்பளிப்பு வைபவத்தில், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சார்பில் டாக்டர் ரவிராஜ், சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி ஆகியோரிடம் திரு இராமகிருஷ்ணன் "கிரயோ" இயந்திரங்களைக் கையளிப்பார்.

லயன்ஸ் கழக 306பி பிராந்தியத் தலைவரின் முயற்சியின்பேரில் இந்த "கிரயோ" இயந்திரங்களில் இரண்டை கொட்டாஞ்சேனை மேற்கு லயன்ஸ் கழகத்தினரும், ஒரு இயந்திரத்தை கொழும்பு மத்தி லயன்ஸ் கழகத்தினரும், யாழ். மாவட்டக் கண் நோயாளர்களின் நலன்கருதி அன்பளிப்புச் செய்தனர்.

(அ-162)

மடு முகாமில் தினமும் ஒருவர் உயிரழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 22

மடு முகாமில் இடம்பெயர்ந்தவர்கள் மத்தியில் தினமும் சராசரி ஒருவர் வீதம் உயிரிழந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ந-ள)

சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன 22

யாழ். மாவட்டம், கல்வி வலயம் இரண்டைச் சேர்ந்த பாடசாலைகளில் ஆண்டு 11 வகுப்பில் தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு இன்று சனி காலை 8-30 மணி முதல் பின்வரும் இடங்களில் நடைபெறும்

★ சங்கானை, சண்டிலிப்பாய் கோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம்.

★ உடுவில், தெல்லிப்பளை கோப்பாய் கோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு தெல்லிப்பளை யூனியன் கல்லூரி.

★ பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி கோட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

இதேவேளை —

யாழ். மாவட்டம் வலயம் 2 பாடசாலைகளில் சிறுவர் நாடகங்களைத் தயாரிக்க ஆர்வமுள்ள ஆசிரியர்களுக்கான கருத்தரங்குத் தொடரின் முதலாவது செயன்முறைக் கருத்தரங்கு இன்று காலை 8-30 மணிமுதல் 4-30 மணிவரை நடைபெறும்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறுஇந்த கருத்தரங்கில் உடுவில், தெல்லிப்பளை கோட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொள்வர்.

(த-5-152)

திறந்த பல்கலைக்கழக தொழில்நுட்ப பாடநெறிக்கு பாடவிதான விலக்கு வசதி

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம் நடத்தும் 3 வருட "ரெக்னீஷியன்" (தொழில் நுட்பவியலாளர்) டிப்ளோமா பயிற்சி திறந்த பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்தால் நடத்தப்படும் "ரெக்னீஷியன் டிப்ளோமா" பயிற்சியில் சித்தி அடைவோர்—

திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தொழில் நுட்பப் பாட நெறிகளில் பயிலும் படிக்கும் பட்சத்தில்—

முதல் இரு நிலைகளும், மூன்றாவது நிலையில் 3 பாடத்திட்டங்களும் பாடவிதான விலக்கு அளிக்கப்படும்.

இதுபற்றிய தகவல் திறந்த பல்கலைக்கழக மாணவர் வழிகாட்டி நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறந்த பல்கலைக்கழக யாழ் நிலையம் முழு அளவில் இயங்காத நிலையில், திறந்த பல்கலைக்கழக பாடநெறிகளைப் பயில விரும்பும் மாணவருக்கு "ரெக்னீஷியன் டிப்ளோமா" பயிற்சி நெறி பெரும வாய்ப்பாக அமையும் என்று கல்விப்புல வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

(அ)

இன்று

மிருகவில் படித்த மகளிர் திட்ட ஜுர்க்கா இந்து இளைஞர் மன்றத்தின் ஆண்டு நிறைவு விழா இன்று சனி மாலை 6-00 மணிக்கு மிருகவில் மகளிர் திட்ட விநாயகர் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும். (த-117)

விளையாட்டு நிகழ்வுகள்

வலய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டக் கூற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு வலிகாமம் மேற்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் வி. க. அணியை எதிர்த்து ஊரெழு றோயல் வி. க. அணி மோதும்.

★ ★ ★

எச். என். பி. வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியில் ஹட்டன் நசனல் வங்கியின் யாழ். கிளை நடத்தும் கூடைப்பந்தாட்டக் கூற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும். ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-00 மணி:- யாழ். பல்கலைக்கழக கூட்டு அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி.

★ 4-15 மணி:- யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி.

சித்திரத்தேர் வெள்ளோட்டம்

உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை ஞாயிறு பிற்பகல் 3. 30 மணிக்கு இடம் பெறும்.

விழாவில் திருவாளர்கள் சு, மணிவாசகன், அ ஈஸ்வரநாதன், செஞ்சொற்சீராளன் த. சிவகுமாரன், பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ், ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் ஆகியோரின் பிரார்த்தனை உரைகள் இடம்பெறும், சித்திரத்தேரினை சிறப்புற நிர்மாணித்தவர்களும் கௌரவிக்கப்படுவர்.

(த)

இலங்கைக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பித்துள்ள பிரமாணப் பத்திரத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:-

இந்திராகாந்தி மற்றும் ராஜீவ்காந்தி தலைமையிலான காங்கிரஸ் அரசுகள் 1982இல் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஈழப்போராளிகளுக்கும் ஊக்கமும் பயிற்சியும் ஆதரவும் அளித்தன. ஈழப்போராளிகள் தமிழகத்தில் பயிற்சி முகாம்கள் அமைக்க அனுமதியும் அளித்தன. அந்த அரசுகளின் அப்போதைய கொள்கைகளுக்கு ஏற்ப இந்த உதவிகள் அளிக்கப்பட்டன.

இலங்கை விவகாரத்தில் இ.மு கழகத்தின் பங்கு நிலையானது போதிய ஆயுதம் செய்யாமல் இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பியதால் நமது இராணுவ வீரர்கள் ஏராளமானோர் மடிந்தனர்.

இந்திய அமைதிப்படை சென்னைதிரும்பியபோதுஅவர்களைவரவேற்க நான் செல்லாததற்குஇதுதான்காரணம். இது எந்த வகையிலும் இந்திய இராணுவத்தை அவமதிக்கும் நோக்கம் கொண்டதல்ல — என்று பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

■ அமைதிப்படை தாயகம் திரும்பிய போது அதனை வரவேற்க அன்று முதலமைச்சராக இருந்த கருணாநிதி செல்லவில்லை. அது பற்றி சட்டசபையில் கேட்டபோது— எனது தமிழ்ச் சாதியைச் சேர்ந்த உயிர்க்கணக்கானவர்களை கொன்று குவித்து விட்டு வரும் படைக்கு வரவேற்பளிக்க நான் எப்படிப் போவேன்? — என்று கருணாநிதி பதிலளித்தார். அதே கருணாநிதி இப்போது முன் ஆயத்தமின்றி இந்தியப்படை இலங்கை சென்றதால் ஏராளமான இந்திய வீரர்கள் மடிந்தனர் என்றும், அந்த வருத்தம் காரணமாகத்தான் தாம் வரவேற்புக்குச் செல்லவில்லை என்றும் கூறுகின்றார்.

ஆயுதம் இல்லாமல் அமைதிப்படை சென்றது என்றால் என்ன அர்த்தம்? இன்னும் பல தமிழர்களை இந்திய இராணுவம் கொல்லவில்லை என்று கருணாநிதி கூறுகிறாரா? — இப்படிக் கோபாலசாமி கேட்டார். (அ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விலை குறைப்பு

நாவாந்துறை மாட்டு இறைச்சிக் கடையில் இன்று சனிக்கிழமை (22 - 01 - 94) தொடக்கம் மாட்டு இறைச்சி ஒரு கிலோ 80 ரூபாய்ப்படி விற்பனை செய்யப் படும்.

நாவாந்துறை
மாட்டு இறைச்சிக் கடை உரிமையாளர்கள்
(29053)

மரண அறிவித்தல்கள்

திருமதி தனலட்சுமி சண்முகராஜா
(லட்சுமி)

திருமதி தனலட்சுமி சண்முகராஜா (லட்சுமி) (சங்கீத ஆசிரியை, சைவ மங்கையர் கழகம் கொழும்பு) 18-01-94 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சண்முகராஜாவின் அன்பு மனைவியும், கேதீஸ்வரி (சைவ மங்கையர் கழக, ஆசிரியை), ஷங்கரி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நாகேஸ்வரி பரமானந்தம், திரு. வி. தியாகராஜா, திரு. வி. கணேசன், திரு. வி. லோகநாதன், திரு. வி. நில்லைநாதன், திருமதி பரமேஸ்வரி நடராஜா, திருமதி இராஜேஸ்வரி சிவகப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 19-01-94 அன்று கொழும்பில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறேன்.

தகவல்:
திருமதி ரதிதேவி லோகநாதன்
[மைத்துனி]

50, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (29049)

ந குணசிங்கம்

ஏழாலை வடக்கைச் சேர்ந்த நல்லையா பூரணம் தம்பதிகளின் அன்பு மகன் குணசிங்கம் சுன்னாகம் (ப. நோ. கூ. சங்க ஊழியர்) 20 - 01 - 1994 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் செந்தில்குமரன் (சுவிஸ்), சுசீ, கோபிநாத் ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகசபாபதி, தங்கராசா (C. T.B),பாலசுப்பிரமணியம் (C. T. B), செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், விக்கினராசா (லண்டன்), குருசாமி (சுன்னாகம் தபாலக ஊழியர்), சிவராசா (அண்ணா கோப்பி - யாழ். கிளை) ஆகியோரின் மைத்துனரும், வேலுப்பிள்ளையின் சகலனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 21 - 01 - 1994 இல் தாவடி மயானத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்;
கு. தவமணி
(மனைவி)

துரை வீதி,
கோண்டாவில் மேற்கு.
(29036)

ஆறுமுகம் அருளானந்தம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் திருமதி இராசம்மா ஆகியோரின் அன்புப் புதல்வர் ஆ. அருளானந்தம் (இளைப்பாறிய கணக்காளர், சாமுவேல் அன் சன்ஸ், கொழும்பு) 21-1-94 இல் காலமானார்

இவர் தையல்நாயகியின் அன்புக்கணவரும், திருமதி ச. அருள்நாயகி, அ. அருட்பிரகாசம் (பொறியியலாளர், லண்டன்), திருமதி ம. ஜீவநாயகி, செல்வி அ. செல்வநாயகி, அ. ஞானப்பிரகாசம் (முன்னாள் புகையிரத நிலைய அதிபர், கோட்டை — லண்டன்), அ. ஜெயப்பிரகாசம் (பொறியலாளர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. ச. ந. சந்திரசேகரா (இளைப்பாறிய படவரை அறிஞர்), திருமதி அ. சகுந்தலா (லண்டன்), திரு. க. மகேசன் (Ladour Officer கல்முனை), திருமதி ஞா. மதனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி கு. கல்பனா (கனடா), திரு. ச. கல்பராஜ் (லண்டன்), பிரவீன்ராஜ், கேதீஸ்ராஜ், துவாரகா, துஷ்யந்தி, ஆரதி, அஜந்தன், கிஷோக்குமார், சுரேஸ்குமார், நிதோகுமார், அருண் ஆகியோரின் பேரனுமாவார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று (22-1-94) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சதானந்தன் லேன் (பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை) கொக்குவில் கிழக்கில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. ஜெயப்பிரகாசம்
(மகன்)

சதானந்தன் லேன்,
கொக்குவில் கிழக்கு. (29051)

கணபதிப்பிள்ளை கைலாசபதி

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஓய்வு பெற்ற பொறியியலாளர் கணபதிப்பிள்ளை கைலாசபதி காலமானார்.

அன்னார் கரவெட்டி மத்தி திருவருட்செல்வியின் அன்புக் கணவரும், திருத்திகா, திருப்திகரன், திருமுருகன், திருஞானகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம் சென்ற சிவசுப்பிரமணியம், குமாரசாமி (வலம்புரி புடைவை மாளிகை, நெல்லியடி) ஆகியோரின் அன்புச்சகோதரரும், திருவருட்தேவன் [கரைச்சி வடக்கு, ப. நோ. கூ சங்க உள்ளக பரிசோதகர் பரந்தன்) சந்திரசேகரம் (இளைப்பாறிய அதிபர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் கரவெட்டி மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (22-01-1994) சனிக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
குமாரசாமி
(சகோதரர்)

'ஓம் வாசா'
கரவெட்டி மத்தி
கரவெட்டி (29054)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22-01-1994இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

கைலைன் (Hy-Line) பிறவுண்+வெள்ளை பேட்டு குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு கோழிக்குஞ்சுகள் ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும்.

மொத்தமாக எடுப்பவர்களுக்கு விலை 50/- ரூபா மட்டுமே.

மல்லிகாபதி
சுந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாய்.
(29039)

உதவித் தாதியர் பயிற்சி
DIPLOMA IN NURSING - AID

28 - 01 - 1994இல் ஆரம்பம்

★ 18 மாதகால பயிற்சி நெறி
★ தகைமை:- க. பொ. த. (சாதாரணம்)
★ உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு ஏற்புடையதான சான்றிதழ்.
★ ''அக்குபங்சர்'' மருத்துவத்துறை இலவசமாக ஏற்பித்து சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பு:- மாவீரர், போராளிகள் குடும்ப அங்கத்தவர்களுக்கு இலவச பயிற்சியும், இலவச தங்குமிட வசதியும் அளிக்கப்படும்.

விவரங்கள்:-
சாயி மருத்துவக் கல்லூரி,
இல 6, பருத்தித்துறை வீதி (1 ஆம் ஒழுங்கை),
யாழ்ப்பாணம்
(சி-6846)

அந்தியேட்டி அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

தோற்றம்:
18 — 04 — 1930

மறைவு:
25 — 12 — 1993

முத்தையர் யோகம்மா
[புங்குடுதீவு 4 ஆம் வட்டாரம்]

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22-1-94) சனிக்கிழமை வில்லூன்றியில் நடைபெறும். எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை இல. 435, நாவலர் வீதியிலுள்ள க. இராமலிங்கம் அவர்களின் இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு. சுப்பிரமணியம்
[மகன்]
[29055]

ஓராண்டு நினைவலையில்

தோற்றம்:
31
03
1965

மறைவு:
01
02
1993

செல்வன் அருட்பிரகாசம் றவிகரன்

எம் இதயத்தில் ஒளியாகி
உறுதிக்கு உரமாகி
எம்முள் நீயாகி என்றும்
இளமையுடன் நிரந்தரமாய் குடியேறி
நீ தென்றலாய் தவழ்ந்து வந்து
எம் இதயத்தை இனிமாக
நீண்டும் இன்பத்தை மீட்டோர் தடவை
நாம் பார்க்குமுன் ஓராண்டும்
ஒருகணமாய் ஓடி மறைந்ததையா.

[illegible]
(29031)

ஆலயங்களில்

யாழ். கல்வியங்காடு திருவருள் மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் கோயில் மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிறு காலை 9-45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (த)

ஈழ அகதி---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிக்கொள்ள வேண்டும் என்றும், அவர்களைப் பரிவோடும் இரக்கத்தோடும் அணுகி, சரியான சூழ்நிலைகள் இலங்கையில் நிலவாத சமயத்தில் அவர்களை நாட்டை விட்டுத் துரத்தாத வகைக்கு வரவேண்டும் — என்றும் திரு. கிருஷ்ண ஐயர் தெரிவித்தார்.

இதே வேளை, முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கைத் தமிழ் அகதிகளை உடனடியாகவும் பூரணமாகவும் திருப்பி அனுப்பவேண்டும் என்று பிரதமர் நரசிம்மராவுக்கு தொடர்ந்து வலியுறுத்தப் போவதாக கூறியிருக்கிறார். அண்மையில் சென்னையில் பொலீஸ் அதிகாரிகள் மாநாட்டில் பேசிய முதலமைச்சர் தமிழ் அகதிகளை முழுமையாகத் திருப்பி அனுப்புவது தான் எங்களது நோக்கம் குறிக்கோள்''— என்று கூறினார்.

இம்மாதம் 30 ஆம் திகதி முதல் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவிருக்கும் தமிழ் அகதிகள் தாமாகவேமுன்வந்து திரும்பிச் செல்கின்றோம் என்று முன்பு கூறியிருந்தவர்கள் ஆவர் இவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். (அ-எ)

பெரிய ..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினர் செல்லக் கூடாது என இராணுவத்தினரால் அவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஸ்ரீலங்கா இராணுவம் முற்றாக வெளியேறிய பின்னரே அப்பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர் தமது நிலைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர். (இ-3)

வறிய---
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதிய திட்டம் பற்றிய விவரம் வருமாறு:-

★ வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் — 750 ரூபாவுக்கு உள் வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த 5 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு இம்முத்திரைகள் கிடைக்கும்.

★ 1993 ஒக்டோபர் மாதம் முதல் அமுலுக்கு வரத்தக்கதாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

★ வேலை இல்லாது இருக்கும் வறுமைக் கோட்டில் அடங்காத குடும்பத்தினரின் பிள்ளைகளுக்கும் இந்த முத்திரை வழங்கப்படலாம். அவர்களின் குடும்ப நிலையை பொறுத்தே இம்முத்திரை வழங்கப்படும்.

(இ-3-162)

மரண அறிவித்தல்

திருமதி
கனகாம்பிகை கனகசபை

திருமதி கனகாம்பிகை கனகசபை 20 - 01 - 1994அன்று கொழும்பில் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் வட்டு கிழக்கு வாசியான காலஞ்சென்ற மயில்வாகனம் கனகசபையின் அன்பு மனைவியும், தையிட்டி வாகீகளான காலஞ்சென்ற சந்தையா மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், மதிவாணன், பூங்கோதை, கண்ணன், மணிவண்ணன், கலைவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெனபாலராஜன் (கிளிநொச்சி), கோமதி, ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜா' கஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற துரைராஜா, திருமதி சண்முகசுந்தரம், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாணிக்கவாசகர், பரமன், காலஞ்சென்ற திருமதி க. நிலகவதி, சந்தசாமி, ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 22-01-94 ஆம் திகதி கொழும்பில் இடம் பெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
ச. புவனேஸ்வரி
கோட்டை,
(29052)

இன்று விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம் ஜன. 22 எஸ்.எம். பொன்னாண்டோ நிறுவன ஆதரவில் யாழ். றோட்டரக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. முதல் நாளான இன்று காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை பூப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற உள்ளன. நடைபெறும் இடம் யாழ். இந்து மகளிர் கல்லூரி (இ)

யாழ். கந்தர்மடம்
அருள்மிகு
செல்வநாகபூஷணி அம்பாள் திருக்கோயில்
கும்பாபிஷேக தினமும் தீ மிதிப்பும்

அம்பாளுக்கு 23-01-94 ஞாயிற்றுக்கிழமை
கும்பாபிஷேகதினம்

24-01-94 திங்கட்கிழமை
தீ மிதிப்பும் நடைபெறும்

23-01-94 கும்பாபிஷேக தினம் அன்று
காலை 10 மணிக்கு 108 சங்காபிஷேகமும் நடைபெற்று, பகல் 12 மணிக்கு பூசைகள் நடைபெறும். பிற்பகல் ஆலயத்தில் பஜனைகள் நடைபெறும்.
மாலை 4 மணிக்கு

தெய்வீக இசையரங்கும் திருவூஞ்சலும்

பாடுபவர்:
திருநெறிய தமிழ் இசை அரசு
ந வீ. மு. நவரத்தினம் குழுவினர்
இராமநாதன் நுண்கலைப் பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

24-01-94 தீ மிதிப்பு
அன்று காலை 9மணிக்கு பூசை பொங்கல் நடைபெற்றுமாலை 5மணிக்கு தீ மிதிப்பு நடைபெறும்.
அன்று மாலை 4 மணிக்கு
கம்பன் கழகம்
திரு இ. ஜெயராஜ் அவர்களின்
பேச்சும் இடம்பெறும்

செ. குகநாதன்,
ஆலய தர்மகர்த்தா

108, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (29046)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு திருவருள்மிகு
இலங்கை நாயகி மனோன்மணி
அம்பாள் கோயில் புனராவர்த்தனப் பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேக
விஞ்ஞாபனம்

காலம்: 23-01-94ஞாயிற்றுக்கிழமை காலை 9 45, 11-15 மணிக்குள் வரும் ரோகிணி நட்சத்திரமும், மீனலக்கினமும் கூடிய சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

முக்கிய குறிப்பு: 22-01-94 சனிக்கிழமை காலை 6-00மணிமுதல் மாலை 4-00மணிவரையும் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

நியாய சிரோமணி பிரம்மஸ்ரீ.
கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
[நல்லூர்]

சிவாகம ஞானபாஸ்கரன் பிரம்மஸ்ரீ
தா. மகாதேவக்குருக்கள்
[இணுவில்]

ஆகியோரின் தலைமையில் நடைபெறும்

கும்பாபிஷேக பிரதமகுரு:
பிரம்மஸ்ரீ சதாசிவ யோகீஸ்வரக் குருக்கள்
(ராஜாஜி)

மஹா கும்பாபிஷேக உபயம்
பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா

இங்ஙனம்
ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ
சு. பாலசுப்பிரமணியரும்.
திருப்பணிச் சபையினரும்.
(29043)

மரண அறிவித்தல்

திருமதி சோமு இலட்சுமி

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த இலட்சுமி காலமானார். இவர் காலஞ்சென்ற வயிரமுத்து சோமு அவர்களின் அன்பு மனைவியும், விஸ்வலிங்கம் (உப அதிபர், அத்தியார் இந்துக் கல்லூரி), தங்கம்மா, குமாரவேலு (பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர், வலி தெற்கு), குணரத்தினம் (பொது முகாமையாளர், பனங்காமம் பற்று ப. நோ. கூ. சங்கம்), தட்சணாமூர்த்தி, கந்தசாமி ஆகியோரின் அருமைத் தாயாரும், குமாரசாமி (இ. போ. ச.), இராசலட்சுமி, கமலாதேவி, கமலகுமாரி, தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்லப்பா, சின்னப்பு, மாணிக்கம், தம்பிராசா (இளைப்பாறிய அதிபர்), சின்னத்துரை (கனடா) காமாட்சியம்மாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரணீதரன், தர்மினி, திருக்குமரன், சத்தீதரன், விதியா, பிரதீபன், லோகப்பிரசன்னா, இராகுலன், காண்டீபன், கோகுலவாணி, ரகுபரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22-01-94) சனிக்கிழமை 10.00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சோ. விஸ்வலிங்கம்
(உப. அதிபர்)

புத்தூர் கிழக்கு, புத்தூர். (29050)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org